இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 18-07-2023

# திசை காட்டும் தி.மு.க.

**திரா**விட முன்னேற்றக் கழகத்தின் மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானம் என்பது இந்தியா செல்ல வேண்டிய திசைக்கு வழிகாட்டியாக அமைந்திருக்கிறது.

"கடந்த ஒன்பது ஆண்டுகால பா.ஜ.க. அரசால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள வேதனைகளை, தமிழ்நாட்டை - தமிழ்நாட்டு மக்களை புறக்கணித்து ஏமாற்றியதை வருகின்ற நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் உரக்கக் குரலெழுப்புவோம்!" என்று தீர்மானித்துள்ளது இந்தக் கூட்டம். கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றாமல் விளம்பர மோகத்தோடு அந்தக் கட்சி இருப்பதை இக்கூட்டம் கண்டித்துள்ளது. இந்தியாவின் பன்முகத் தன்மைக்கு வேட்டு வைக்கும் காரியங்களை பா.ஜ.க. எப்படி எல்லாம் செய்து வருகிறது என்பதை பட்டியலிட்டுள்ளது தி.மு.க.வின் தீர்மானம்.

" ஜனநாயக இந்தியா - சமத்துவ இந்தியா - சமூக நீதி இந்தியா - பன்முகத்தன்மையின் பூந்தோட்டமாக இருக்கும் இந்தியா என்பது பா.ஜ.க.வின் வெறுப்பு அரசியலால் - சனாதன அரசியலால் - இன்று எதேச்சாதிகார இந்தியாவாக மாற்ற இன்னொரு முறை வாக்களியுங்கள் என்று விரைவில் பிரதமர் மோடி அவர்களும் - அவரது சகாக்களும் வரப் போகிறார்கள்" என்ற அபாய எச்சரிக்கை செய்துள்ளது தி.மு.க.வின் தீர்மானம்.

தமிழ்நாட்டிற்கு கடந்த 9 ஆண்டுகளில் பா.ஜ.க. ஆட்சி எதையும் தரவில்லை என்பதை சுட்டிக்காட்டி உள்ளது தீர்மானம். "நிதியும் இல்லை. திட்டங்களும் இல்லை. ஒன்றிய அரசு வேலை வாய்ப்புகளிலும் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு இடமுமில்லை" என்பதை அம்பலப்படுத்தி இருக்கிறது. "பா.ஜ.க.வுக்கு இனியொரு முறை மக்கள் வாய்ப்பை கொடுத்தால் இந்தியாவும் தாங்காது - இந்தியாவிற்காக உருவாக்கப்பட் டுள்ள அரசியல் சட்டமும் தாங்காது" என்று எச்சரிக்கை செய்துள்ளது தி.மு.க.வின் தீர்மானம். இந்த பேராபத்தை விளக்கிடும் வகையில், திராவிட முன்னேற்றக் கழக எம்.பி.க்கள் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் உரக்கக் குரல் எழுப்பி, தமிழ்நாட்டு மக்களுக்காகவும் - இந்தியாவுக்காகவும் செயல்படுவது என அக்கூட்டம் தீர்மானித்துள்ளது.

**இரண்டு முறையாக ஆட்சியில் இருக்கிறது பா.ஜ.க. 2014 க்கு முன்னதாக கொடுத்த முக்கியமான வாக்குறுதிகள் எதையும் அந்தக் கட்சி நிறைவேற்றவில்லை.**

**★ நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வெளிநாட்டில் உள்ள அனைத்து கருப்புப் பணத்தையும் மீட்டு வருவோம்.**

**★ கருப்புப்பண பரிவர்த்தனை வழக்குகளை விசாரிக்க தனி நீதிமன்றம் அமைப்போம்.**

**★ ஏழை எளிய மக்களுக்கு ரூ.15 லட்சம் கொடுப்போம்.**

**★ ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்குவோம்.**

**★ விவசாயிகள் வருமானம் இரண்டு மடங்கு ஆகும்.**

**★ கங்கை - காவிரியை இணைப்போம்.**

**★ தென்னக நதிகளை இணைப்போம்.**

**★ ஜவுளித் துணிகளின் சொர்க்கபுரியாக ஈரோடு மாற்றப்படும்.**

**★ ஈரோடு மஞ்சளை வைத்து அழகுசாதனப் பொருள் தயாரிப்போம்.**

**★ ராமேஸ்வரத்தை உலகப் புகழ்பெற்ற சுற்றுலா தலம் ஆக்குவோம்.**

**★ மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்படும்.**

**★ தமிழ்நாட்டு மீனவர்களுக்கு சிங்கள கடற்படையால் இனி ஒரு பாதிப்பு கூட வராது.**

**★ மீன்கள் இருக்கும் இடத்தை சேட்டிலைட் மூலம் கண்டறிந்து மீனவர்களின் செல்போனுக்கு தகவல் அனுப்புவோம்.**

**- இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.**

ஜனநாயக சக்திகளின் ஒரே நோக்கமாக பா.ஜ.க.வை தோற்கடிப்பது என்பது மாற வேண்டும். பாட்னாவில் கூடிய எதிர்க்கட்சிகள் ஒற்றுமைத் தன்மையுடன் இந்த முடிவுக்கு வந்துள்ளார்கள். இன்னும் சில கட்சிகள் இணைந்து பெங்களூரிலும் கூட இருக்கிறார்கள். இவர்களின் ஒற்றை நோக்கம் என்பது பா.ஜ.க.வை வீழ்த்துவதாக அமைந்துள்ளது.

பா.ஜ.க. என்றால் தனிப்பட்ட பா.ஜ.க.வை அல்ல. பா.ஜ.க. என்பது இன்றைய நிலையில் ஜனநாயகத்துக்கும் சமூகநீதிக்கும் மதச்சார்பின் மைக்கும் அச்சுறுத்தலாக இருக்கிறது. எனவே பா.ஜ.க.வை வீழ்த்துவது என்பது இந்த தத்துவங்களைக் காப்பதன் மூலமாக இந்தியாவைக் காப்பது ஆகும். ஜனநாயகம் - சமத்துவம் - சமூகநீதி - மதச்சார்பின்மை ஆகிய கொள்கைகள்தான் பா.ஜ.க.வை வீழ்த்தியாக வேண்டும் என்று கட்டளையிடுகின்றன.

**ஆனால் இதைப் பற்றி எல்லாம் பா.ஜ.க.வுக்கு கவலை இல்லை. மகாராஷ்டிரா மாநிலத்தில் சிவசேனை கட்சியையும் தேசியவாத கட்சியையும் உடைத்து ஆட்சிக்கு வந்துள்ளது பா.ஜ.க. உண்மையில் அங்கு நடப்பது ஆட்சி அல்ல. ஆனால் மராட்டியத்தை ஆள்வதைப் போல பா.ஜ.க. மார்தட்டிக் கொள்கிறது.**

**சிவசேனாவில் இருந்து கட்சி மாறிய 15 எம்.எல்.ஏ.க்கள் தகுதி நீக்கம் செய்வது குறித்து ஓராண்டு காலமாக சபாநாயகர் முடிவெடுக்கவில்லை. விரைந்து முடிவெடுக்க வேண்டும் என்று சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே, உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார். உடனடியாக சபாநாயகருக்கு நோட்டீஸ் அனுப்பி இருக்கிறது உச்சநீதிமன்றம். 15 கட்சிமாறிகளை தகுதி நீக்கம் செய்தால் அங்கு யாருடைய ஆட்சியும் இருக்காது.இது போன்ற கேவலமான அரசியல்கள் மூலமாகத்தான் பா.ஜ.க.வின் ஆயுள் நீடித்துக் கொண்டு இருக்கிறது. இதைத் தான் பா.ஜ.க. கூச்சமில்லாமல் செய்யும். மீண்டும் வென்றால் இதுதான் தான் இந்தியாவின் ஜனநாயகமாக மாறிவிடும்.**

எனவே, தங்களுக்குள் உள்ள வேற்றுமைகளை மறந்து பா.ஜ.க.வை வீழ்த்தும் ஒற்றை இலக்குடன் அனைத்துக் கட்சிகளும் பயணிக்க வேண்டும் என்ற தி.மு.க. காட்டும் திசை நோக்கி அகில இந்தியக் கட்சிகள் அனைத்தும் செல்லட்டும்.

●●

## திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மாபெரும் பொதுக்கூட்டம்!

### 10,100 பயனாளிகளுக்கு நலதிட்ட உதவிகள் வழங்கி

### கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

*திருவண்ணாமலை, ஜூலை 18 -*

திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதிஸ்டாலின் அவர்கள், மூத்தகழக முன்னோடிகளுக்கு பொற்கிழிகள் வழங்கியும், 10,100 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் சிறப்புரையாற்றுகிறார்.

இன்று (18.07.2023 - செவ்வாய்க்கிழமை) மாலை 7.00 மணிக்கு, திருவண்ணா மலை, திருக்கோவிலூர் ரோடு, நகராட்சி அலுவலகம் எதிரில் அமைந்துள்ள கலைஞர் திடலில், திருவண்ணா மலை மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டத்திற்கு கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினரும், மாவட்ட கழக செயலாளருமான எ.வ.வேலு தலைமை வகிக்கிறார்.

கழக தணிக்கைக்குழு உறுப்பினர்கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாவட்ட துணை செயலாளர் மு.பெ.கிரி எம்.எல்.ஏ, தலைமை செயற்குழு உறுப்பினர் பெ.சு.தி.சரவணன் எம்.எல்.ஏ, எஸ்.அம்பேத்குமார் எம்.எல்.ஏ, ஒ.ஜோதி எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வடக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.எஸ். தரணிவேந்தன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு மூத்த கழக முன்னோடிகளுக்கு பொற்கிழிகள் வழங்கியும், 10,100 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.

விழாவில் தெற்கு மாவட்ட அவைத்தலைவர் த.வேணுகோபால், வடக்கு மாவட்ட அவைத்தலைவர் ஆர். ராஜேந்திரன், கழக மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா. ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.சிவானந்தம், கே.ஆர்.சீதாபதி, பொன். முத்து, ஆர்.வேல்முருகன், கே.வி.ராஜ்குமார், மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைசெயலாளர் வ.அன்பழகன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், டி.ஏ. தட்சணாமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் என்.பாண்டுரங்கன்,

ப்ரியா ப.விஜயரங்கன், க.லோகநாதன், ஜெயராணிரவி, விஜயலட்சுமி ரமேஷ் மற்றும் கே. வி.சேகரன், கோ.எதிரொலி மணியன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பார்வதி சீனுவாசன், நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாநில தொ.மு.ச., பேரவைச் செயலாளர் க.சௌந்தரராசன், சிவ.ஜெயராஜ், பாரதிராமஜெயம்,

தெற்கு மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி. எம்.நேரு, ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், ஏ.ஏ.ஆறுமுகம், பொன்.தனசு, எச்.சாதிக் பாஷா, கு.கணேஷ், சி. ராம்காந்த், பச்சையம்மாள் யேசு, இரா.சீனிவாசன், கற்பகம் சரவணன், உ.நித்யா,

வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் என். நரேஷ்குமார், ஏ.என்.சம்பத், என்.கே.பாபு, மா. ஏழுமலை, கே.ஏ.புஷ்பராஜ், ஏ.மணிகண்டன், இ.பிச்சைகண்ணு சாது. ஆனந்த், அப்சல்பாஷா, ப.க.மணிவண்ணன், இ.மணிகண் டன், பி. எஸ்.சாந்தகுமார்,

தெற்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர் செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ. கோவிந்தன், ப.கேசவன், கோ. ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராம ஜெயம், த.செந்தில் குமார், அ.ஏழுமலை, த.மனோகரன்,

வடக்கு மாவட்ட நகர செயலாளர்கள் ஏ.சி. மணி, கே.விஸ்வநாதன், ஏ.தயாளன், வடக்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சுப்பிரமணியன், பி.மனோகரன், ஏ.எழில்மாறன், கே.டி. ராமசாமி, என்.டி.மனோகரன், எஸ்.எஸ்.அன்பழகன், எம்.சுந்தர், எஸ். மோகன், து.மாமது, ஏ. ஞானவேல், என்.சங்கர், எம்.தினகரன், ஜெ.கே. சீனுவாசன், ஏ.ஜி.திராவிடமுருகன், எஸ்.ரவிக்குமார், கே.பி.ஆர்.பி.பழனி, எஸ்.பிரபு, சி.ஆர்.பெருமாள், ப.இளங்கோவன், டி.ராதா, ஏ.சுந்தரேசன்,

தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, கோ.கண்ணன், அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி.கென்னடி, கு.பாலசுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசிராஜசேகரன் வடக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.சி.வி. தயாநிதி, ஏ.எம்.காசி, எம்.கிருஷ்ணமூர்த்தி, வெள்ளைகணேசன், ஆர்.வெங்கடேஷ்பாபு, ஆ.மோகனவேல், ஆர்.நந்தகுமார், அப்சர்லியாகத்பாஷா,

தெற்கு, வடக்கு மாவட்ட பேரூர் செயலாகள் சி.கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழகன், எம்.சீனுவாசன், கோ.தனசேகர், ஆர்.முருகன், வி.வெங்கடேசன், டி.கே. மோகன், கே.கோவர்தணன், வேணிஏழுமலை மற்றும் ஒன்றியக்குழு, நகராட்சி, பேரூராட்சி மன்றங்களின் தலைவர்கள் உட்பட ஒன்றிய, நகர, பேரூர் கிளைக்கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கில் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிறைவாக நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் நன்றி கூறுகிறார்.

முன்னதாக ஆக்காட்டி ஆறுமுகம் குழுவினரின் இசைநிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

## கலைஞர் நூற்றாண்டு விழா போக்குவரத்து தொ.மு.ச.

# கோத்தகிரி கிளை சார்பில் நலத்திட்ட உதவிகள் !

### மாவட்ட தி.மு.க. செயலாளர் பா.மு.முபாரக் வழங்கினார்!

*உதகை, ஜூலை 18-*

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக தொ.மு.ச. கோத்தகிரி கிளை சார்பில் ஏழை எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி தொ.மு.ச. மண்டல பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்றது, தொ.மு.ச. கோத்தகிரி கிளை தலைவர் ரத்தினக் குமார் வரவேற்றார்.

நீலகிரி மாவட்ட தி.மு.க. செயலாளர் பா.மு.முபாரக் கலந்து கொண்டு தொ.மு.ச. தொழிற்சங்க கொடியேற்றி வைத்து, ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்டங்களை வழங்கி சிறப்புரையாற்றினார்.

மாவட்ட அவைத் தலைவர் போஜன், கோத்தகிரி ஒன்றிய செயலாளர் நெல்லை கண்ணன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் வீரபத்திரன், சத்தக்கத்துல்லா, கழக மூத்த முன்னோடி ஐக்கனாரை கண்ணன், கோத்தகிரி பேரூர் செயலாளர் காளிதாஸ், கோத்தகிரி பேரூராட்சி தலைவர் ஜெயகுமாரி, மாவட்ட தொழிலாளர் அணி தலைவர் LPF முருகன், தொமுச மண்டல தலைவர் லூக்மான் ஹக்கீம், பொருளாளர் ஆனந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதிகள் ஜாபர், சுசில், நடுஹட்டி ஊராட்சி தலைவர் கிருஷ்ணன், அணிகளின் துணை அமைப்பாளர்கள் திருச்செல்வம், சண்முகராஜ், வின்சென்ட், சுரேஷ், கோத்தகிரி கிளை நிர்வாகிகள் மகாலிங்கம், சரவணன், குமார், எர்குலஸ், சிவப்பிரகாசம், முருகன், ஸ்டீபன், முத்துராஜா, ஆனந்தன், சந்திரன், கணேசன், மத்திய சங்க நிர்வாகிகள் நிரேஷ்குமார், யோகரத்தினம், குமார், ராமலிங்கம், மேகநாதன், ரவி, பாலசந்திரன், ராமலிங்கம், கோபாலகிருஷ்ணன், முத்துக்குமார் உட்பட கழக செயல் வீரர்கள் திரளாக கலந்துகொண்டனர்.

## எளிய பின்புலங்களிலிருந்து வருபவர்களின்

# திறன்களை வளர்க்கவே 'சத்தியதேவ் லா அகாடமி'!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் 'ட்விட்டர்' பதிவு!

**சென்னை, ஜூலை 18-**

**"எளிய பின்புலங்களிலிருந்து வருபவர்களின் திறன்களை வளர்க்கவே சத்தியதேவ் லா அகாடமி" என்று அதனைத் தொடங்கி வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

சட்டம் பயிலும் மாணவர்களுக்கு வழிகாட்டும் வகையில் சத்தியதேவ் லா அகாடமியை தொடங்கி வைத்தது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

சமூகத்தில் கல்வியும் வேலைவாய்ப்பும் ஒரு சாராருக்கு மட்டுமே சொந்தமல்ல என்று போராடி சமூக நீதி (SocialJustice) அடிப்படையில் உரிமைகளைப் பெற்றோம். 1961ஆம் ஆண்டு வழக்கறிஞர் சட்டம் இயற்றப்பட்ட பிறகும், இடஒதுக்கீடு (Reservation) கொண்டுவரப்பட்ட பிறகுமே எளிய மக்களும் சட்டத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். எளிய பின்புலங்களில் இருந்து வரும் அவர்களது திறன்களை வளர்க்க, ஓய்வு பெற்ற நீதியரசர் சந்துரு அவர்களை இயக்குநராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள சத்திய தேவ் லா அகாடமியைத் (Sathyadev Law Academy) தொடங்கி வைத்தேன்.

இதில், ஏழை எளிய மக்களின் கல்விக்காக உள்ளார்ந்த அக்கறையோடு தொடர்ச்சியாகச் செயல்பட்டுவரும் அன்புக்குரிய தம்பி சூர்யா அவர்களின் பங்களிப்பைப் பாராட்டுகிறேன். சட்டத்தொழிலும் மருத்துவத் தொழிலும் மற்ற தொழில்கள் போல் அல்ல. மற்றவை பணி புரிவது, இவை பயிற்சி செய்வது!

எனவே, நான் முதல்வன் திட்டத்தின் கீழ், மாணவர்களுக்கு இந்த அகாடமியின் மூலம் பயிற்சி அளிக்கக் கேட்டுக் கொண்டுள்ளேன்.

நீதியரசர் சந்துரு அவர்களோடு, ஜெய் பீம் திரைப் படத்திற்குப் பிறகும் தொடர்ந்து சமூக அக்கறையோடு செயல்பட்டுவரும் தம்பி சூர்யா, இயக்குநர் த. செ.ஞானவேல் ஆகியோருக்கு மீண்டுமொருமுறை வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.



திருச்சி – திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை ராம்ஜிநகரில் உள்ள தனியார் (கேர்) கல்லூரியில் வேளாண் சங்கமம் 2023 என்ற தலைப்பிலான மாநில அளவிலான 'வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம்' வரும் 27ஆம் தேதி முதல் 29ஆம் தேதி வரை 3 நாட்கள் திருச்சியில் நடைபெறுகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்க உள்ளார். இந்த வேளாண் கண்காட்சிக்கான முன்னேற்பாட்டு பணிகளை, தமிழக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார், மாநகர மேயர் அன்பழகன், மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, கிழக்கு மாநகரச் செயலாளர் மதிவாணன் மணிகண்டன், ஒன்றிய செயலாளர் மாத்தூர் கருப்பையா, உட்பட அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.